REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 10உ வெள்ளி (26—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 11உ சனி (27—8—55) [இதழ் 63

கதர் துணி பெறுவதில் தாமதமானதின் எதிரொலி

முறையான உடைகளின்றி தபால்-தந்தி ஊழியர்கள் தவிப்பு

தங்களுக்குத் தரப்படும் முறையான வேலை நேர உடைகள் குறித்த காலத்தில் தரப்படாமையினால், அதிகாரிகளின் போக்கை எதிர்த்து பம்பாயில் உள்ள தபால்-தந்தி இலாகா ஊழியர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

அமுல் செய்யவா-கிழித்தெறியவா?

'நேற்று-இன்று-நாளை பற்றி கருத்தைச் செலுத்துங்கள்'

'மொழிப் பற்று வளர்த்தாக வேண்டும்'

மதுரை மாணவரிடை அண்ணா

"நேற்று என்ன நடைபெற்றது?—இன்று என்ன நடைபெறுகிறது?—நாளை என்ன நடக்கும்?—என்பனவற்றிலே மாணவர்கள் தங்கள் எண்ணத்தையும், கருத்தையும் செலுத்த வேண்டும்; சாதி, மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க அவர்கள் முன்வர வேண்டும்; அவர்கள், விஞ்ஞானத்துடன் இணைந்த உள்ளத்தையும் பெற்றிருக்க வேண்டும்; அவர்கள் கல்வி கற்கும் சமயம் ஆசிரியர்களின் உத்தரவுகளுக்கு அடங்கி நடக்கவேண்டும்."

—இவ்வாறு, மதுரை அமெரிக்கன் கல்லூரி சங்கத்தின் சார்பில் 22—8—55 மாலை தோழர் தேவராஜ் தாமஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில், 'நேற்று—இன்று—நாளை' என்ற தலைப்பில் பேசுகையில் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தக் காலம்—தமிழ் மொழி மீது மக்களுக்கு மீண்டும் ஆர்வமும் பற்றுதலும் ஏற்பட்டுவரும் காலம். இங்கு மட்டுமல்ல; உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டவருக்கும் தங்கள் தங்கள் மொழி மீது பற்றுதல் ஏற்பட்டு வருகின்ற காலம். அண்மையில், இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் சோவியத் நாடு போன்ற மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றிருந்தபோதுகூட, இந்தியாவின் 'தேசிய மொழி' என்று கூறப்படும் இந்தி மொழியில்தான் பேசினார்—ஏற்பட்ட ஒப்பந்தங்களிலும் இந்தி மொழியிலேயே தான் கையெழுத்திட்டிருக்கிறார்;

"இந்தியராக இருந்தபோதிலும்கூட, ஆங்கில நாட்டிலேயே வளர்ந்து அங்கேயே ஆங்கில மொழியும் பயின்ற அவர், அந்நாடுகளிலெல்லாம் இந்தியிலேயே பேசவும், கையெழுத்திடவும் செய்தார் என்றால் 'அவருக்கு ஆங்கிலத்தின் மீது வெறுப்பு' என்று பொருள்? இல்லை—தம்முடைய சொந்த மொழிக்கு அவர் சிறப்புக் கொடுத்திருக்கிறார் என்பதுதான் பொருளாகும்."

நெஞ்சுத் துணிவு?

தென்னாப்பிரிக்க இந்தியர், பாகிஸ்தானியர் பிரச்சினையில், நடுநிலைமையாளரை ஏற்க மறுத்து, ஐ. நா. செயலாளருக்கு தெ. ஆ. மந்திரி எழுதியுள்ள குறிப்பில், தென்னாப்பிரிக்கா சம்பந்தப்பட்ட வரையில், தெ. ஆ. இந்தியர் பிரச்சினையை, 'தீர்ந்துபோன பிரச்சினை'யாகவே கருதவேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறாராம்.

கிழித்தெறிந்தாராம்!

பாக். அரசியல் நிர்ணய சபை உறுப்பினரொருவர், தனது பிரசங்கத்தை எழுதி வாசித்தாராம்; அவ்வாறு எழுதி வாசிப்பதை சபைத் தலைவர் அனுமதிக்க மறுத்தாராம்!

சபையின் விதிகள், எழுதிய பேச்சுக்களை வாசிக்க அனுமதிக்கவில்லையென்றும், தம்முடைய சமய சந்தர்ப்பப்படி விதிகளைப் புறக்கணிக்கலாம் என்றும் தலைவர் குறிப்பிட்டாராம்.

'விதிகளைப் பின்பற்றாதபோது அவை எதற்கு?'—என்று கூறி, எதிர்க் கட்சித் தலைவர் சுகரவர்த்தி சபையின் விதி புத்தகத்தைக் கிழித்தெறிந்தாராம்!

'கல்விக்கு எதிரான கடவுளுக்கு 'பென்ஷன்' தந்துவிட வேண்டும்!'

'மதமாச்சரியங்கள் ஒழிந்தால்தான் மக்கள் முன்னேற முடியும்'

தி. த. நா. காங்கிரஸ் தலைவர் பேசும் சீர்திருத்தம்

"சாதிகள் அத்தனையும் அழிந்து போகும் இந்தச் சமயத்தில் ஒவ்வொரு சமூகத்திற்கும் சம உரிமைகள் கிடைக்க வேண்டும்;

"அரசியல் அதிகாரங்கள் நமக்கு எவ்வளவு அளிக்கப்பட்டபோதிலும், மக்களிடையே சமூக, மத ஒற்றுமையில்லையேல் எந்தவித பலனும் ஏற்படாது;

"இந்த இருபதாம் நூற்றாண்டில் எந்த ஒரு கடவுளும் கல்விக்கு எதிராக இருக்க முடியாது; கல்விக்கு விரோதமானதாக ஒரு கடவுள் இருந்தால், அந்தக் கடவுளுக்கு 'பென்ஷன்' கொடுத்து நம்மிடமிருந்து அனுப்பிவிட வேண்டும்;

"நாட்டில் உள்ள பல மதங்களிடையேயும் பல்வேறு பிரிவுகள் இருப்பதால், கடவுளைத் தெரிந்து கொள்வதில் பலரும் போட்டிபோட வேண்டியதிருக்கிறது; இந்த நிலைமை மாறினாலொழிய நிச்சயம் மக்களின் முன்னேற்றப் பாதையில் தடை ஏற்பட்டே தீரும்,"

என்று திரு-தமிழக காங்கிரஸ் தலைவருள் ஒருவரான குஞ்சன் நாடார் எம்.எல்.ஏ. நெல்லையடுத்த வடக்கன் குளத்தில் பள்ளி ஆண்டு விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கிறித்துவக் கல்லூரியில் பொதுச் செயலாளர்

ஆயிரம் மாணவர்களிடை குறள் பற்றி பேருரை

தாம்பரம் கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில் குறள் விழாச் சிறப்புக் கூட்டம், 25-8-55 மாலை 5 மணி அளவில், கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர் தலைவர் தோழர் சின்னச்சாமி அனைவரையும் வரவேற்றார்; அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தோழர் எ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்தினார்.

அடுத்து தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறள் சிறப்புக் குறித்து விரிவானதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

கூட்டத்தில், ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாணவத் தோழர் கந்தவனம் நன்றி நவில கூட்டம் இரவு 7 மணி அளவில் முடிவுற்றது. (ந. நி.)

கொத்தலாவலை மிரட்டல்!

ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் இந்தியா ஒத்துழைக்கவில்லையாம்!

'இலங்கை—இந்தியா ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் அக்கரை காட்டப் போகிறீர்களா, அல்லது ஒப்பந்தத்தையே ஒழித்துவிடப் போகிறீர்களா?'—என்பதுதான், இந்திய சர்க்காரை இலங்கை சர்க்கார் கேட்கவிருக்கும் அடுத்த கேள்வியாகும்—என்று, விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் நேரு, தமது கடிதத்திற்கு அளித்துள்ள பதில் தமக்கு அதிருப்தியைத் தந்திருப்பதாயும், மீண்டும் தாம் நேருவுக்குக் கடிதம் எழுதப் போவதாயும் இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, தனது சகா மந்திரிகளுக்குத் தெரிவித்திருக்கிறாராம்.

மேலும் அவர், கடந்த 1954 ஜனவரி, அக்டோபர் திங்கள்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், இப்போது அமுல் செய்யப்படுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்தும், அவை பற்றி, இந்திய-இலங்கை உறவுகள் பற்றிய துணைக் குழுவின் சிபார்சுகள் குறித்தும் சகா மந்திரிகளுக்கு, கொத்தலாவலை விளக்கம் தந்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

37,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

கண்ணீர்ப்புகை, தடியடி பிரயோகம்

21 பேர்களுக்குக் காயம்

கடந்த ஆகஸ்டு 22-ம் தேதி முதல் 'போனஸ்' கோரிக்கைக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள 33 தோட்டங்களைச் சேர்ந்த 37,000 தேயிலைத் தொழிலாளர்கள் மீது போலீசார், தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டதின் விளைவாக, 21 தொழிலாளர்களுக்குக் காயம்பட்டதாகத் தெரிகிறது.

தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் உட்பட 5 பேர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

தகவல் தருகிறார்களாம்

சென்னை, ஆக. 25—

இலங்கையில் வாழும் 'இந்தியர்'களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இந்திய சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து, சென்னை சர்க்காரை, இந்திய சர்க்கார் கலந்தாலோசிப்பதாக மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

"அண்மையில் இலங்கை பிரதமருக்கு இந்தியப் பிரதமர் எழுதிய கடிதம் குறித்து சென்னை சர்க்கார் கலந்தாலோசிக்கப்பட்டனரா?"—என்று கேட்டபோது, "கலந்தாலோசிக்கப்பட்டது; இந்திய சர்க்கார், இலங்கை இந்தியர்பற்றி மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகள் பற்றிய எல்லா தகவல்களையும், சென்னை சர்க்காருக்குத் தருகின்றனர்," என்றும் மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

தென்னாடுதான் இந்தியாவுக்கு 'உயிர்நாடி'யாம்!

அதனாலேயே அங்கு ஒரு 'ராஷ்டிரபதி நிவாஸ்' அமைகிறதாம்: டில்லி மந்திரியின் விளக்கம்!

புதுடில்லி, ஆக. 25—

"குடியரசுத் தலைவர் ஆண்டுதோறும் சில நாள் தென்னாட்டில் ஏன் தங்கவேண்டுமென விரும்புகிறார்?"

என்று, ராஜ்யசபை சபையில் கேள்வி ஒன்று கேட்கப்பட்டது.

"தென்னாடு இந்தியாவின் மிக முக்கியமான ஒரு பகுதி என்பதுதான் காரணம்,"

என்று, சர்தார் சுவரண் சிங் என்ற அமைச்சர் பதில் தந்தார்.

"ஐதராபாத்தில் உள்ள 'பாலாரம்' எனும் இடத்தில் உள்ள சர்க்கார் மாளிகையை 'ராஷ்டிரபதி நிவாஸ்' ஆக்கிக்கொள்ள மாநில சர்க்கார் சம்மதித்து விட்டனர்," என்று, அமைச்சர் சபையில் தெரிவித்தபோது, பலத்த ஆரவாரம் இருந்ததாம்.

அதை ஒட்டித்தான் மேற்கண்ட கேள்வி எழுப்பப்பட்டதாம்.

"இந்தியாவின் இரண்டாவது தலைநகராக ஐதராபாத் ஆக்கப்படவிருக்கிறது," என்று கூறப்படுவதை, மந்திரி மறுத்துரைத்தார்.

மேற்பார்வையாளர் இன்றி பரீட்சை!

1,500 கல்லூரி மாணவர் எழுதுகின்றனர்

திருவனந்தபுரத்தில் புதிய முறை

திருவனந்தபுரம், ஆக. 24—

திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 1,500 மாணவர்கள் இன்று தங்களின் கால் ஆண்டுத் தேர்வுகளை எழுதத் துவங்கியபோது, அவர்களைக் கண்காணிக்க எந்த மேற்பார்வையாளர்களும் இருக்கவில்லை.

இந்தியாவிலேயே வேறெந்த பல்கலைக் கழகத்திலும் இம்மாதிரி பெரும் அளவு மாணவர்கள், மேற்பார்வையாளர் இல்லாமலேயே பரீட்சை எழுதுகிற முறை இதுவரை கையாளப்படவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—8—'55 வெள்ளி

இறுதி எச்சரிக்கை!

வட ஆப்பிரிக்காவில் பிரெஞ்சு ஆதிபத்தியப் பிடியில் உள்ள காலனிகளுள் ஒன்றான மொராக்கோவில், கடந்த வாரத்தில் நடைபெற்ற இரத்தக் களரி பற்றி திடுக்கிடும் செய்திகள் கிடைத்தன.

மொராக்கோ மக்கள் பிரெஞ்சுப் 'பிடி'யை அகற்றிவிட்டுத் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் உரிமை பெற வேண்டுமென நெடு நாட்களாகவே கோரி வந்திருக்கின்றனர்.

தங்களுடைய ஆதிபத்திய உரிமையைத் தட்டிப்பறித்து வைத்திருக்கும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெறுவதற்கு, அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்குவதில் தான் பிரெஞ்சு சர்க்கார் கவனம் செலுத்தியதே தவிர, அவர்களது கோரிக்கை பற்றி தட்டிக்கழிக்கும் கொள்கையையே கடைப்பிடித்து வந்தனர்.

தங்களுக்கு சுயாட்சி உரிமை வேண்டும என்று கோரி வந்த மொராக்கோ மக்களிடையே நிலவிய சிறு ஒற்றுமைக் குறைவை — அராபியர்களுக்கும் - பெர்பர்களுக்குமிடையே இருந்த சில சிறிய வேறுபாடுகளைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்து, சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பிய சிறி முகம்மது பென் யூசுப் என்ற மொராக்கோ சுல்தானை கடந்த 1953 ஆகஸ்டில் பிரெஞ்சு சர்க்கார் தூரத்திவிட்டு, மௌலே பென் ஆப்ரா என்ற ஒரு 'பொம்மை' சுல்தானை சிங்காசனம் ஏற்றினர்.

ஏற்கனவே சுதந்திரம் கோரி, பிரெஞ்சு சர்க்காருக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த மொராக்கோ மக்களுக்கு இது கோபத்தை மூட்டியது.

பிரெஞ்சு சர்க்காரோ, ஏதோ அரசியல் சீர்திருத்தங்களைச் செய்வதாகக் கூறிக்கொண்டு காலங்கடத்தி, தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டத் திட்டமிட்டது; ஆனால், நியமிக்கப்பட்ட சுல்தானை வெளியேற்றி மீண்டும் சுல்தானை (மேற்படி வரி பகுதி மறைந்துள்ளது)

மொராக்கோ மக்கள் அறிந்து கொண்டு செயல்பட சந்தர்ப்பம் இல்லாதிருந்தது.

வெளியேற்றப்பட்ட சுல்தானை மீண்டும் அரியாசனத்தில் ஏற்றி, பிரெஞ்சு சர்க்காரின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக அவ்வப்போது தீவிரவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை — ஆர்ப் பாட்டங்களை, பிரெஞ்சு சர்க்கார் தனது ஆயுத பலத்தால்—அடக்கு முறை ஆற்றலால் ஒழித்துவிட முடிந்தது; ஆனால், தீவிரவாதிகளின் எண்ணிக்கை பெருகுவதைத் தடுக்க இயலவில்லை.

மொராக்கோவில் உள்ள பிரெஞ்சு நிர்வாக அதிகாரி கூட, 'மொராக்காவிற்கு சுயாட்சி வழங்குவதற்கான முறையில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,' என்று பாரிஸ் சர்க்காரை வற்புறுத்தி வந்தார்.

பென் யூசுப்பின் பதவி பறிக்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நினைவு நாளின்போது பலத்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறப் போவதாகச் செய்திகள் வந்து கொண்டிருந்தன; 'பென் யூசுப் உடனடியாக மீண்டும் பதவியில் அமர்த்தப்படாவிட்டால், பிரெஞ்சு சர்க்கார் நெருப்புடன் விளையாடுபவர்களாக ஆகவேண்டிவரும்,' என்றுகூட தீவிர தேசியவாதிகள் எச்சரித்தனர்.

பிரெஞ்சு சர்க்காரோ, வழக்கமான தனது ஏகாதிபத்தியப் போக்கினால், அந்த எச்சரிக்கையின் பொருளையும், அதன் விளைவுகளையும் உணர்ந்திருந்தும், தங்களது போக்கிலேயே சென்று கொண்டிருந்தனர்; தேசியவாதிகளின் குரலுக்கு செவிமடுக்க மறுத்தனர்.

'இப்போது பிரெஞ்சு சர்க்காரின் கைப்பாவையாக உள்ள சுல்தானின் கீழ் மந்திரி சபை அமைவதையோ, அந்த மந்திரி சபையில் இடம் பெறுவதையோ எந்த ஒரு தேசியவாதியும் ஏற்றுக்கொள்ள முடியாது,' என்றும் கூறப்பட்டது.

செய்ய வேலை செய்ய வேண்டி வந்திருக்கிறது.

இத்தனை நிகழ்ச்சிகளுக்குப் பிறகும் பிரெஞ்சு அரசியல்வாதிகள் மொராக்கோ மக்களுக்கு விடுதலை வழங்காதிருப்பார்களேயானால், அவர்கள், 'மொராக்கோ விடுதலை'க்கு ஆதரவு காட்டும் வெளிஉலக மக்களினால், 'காலத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள்' என்று தூற்றப்படுவதற்கு இலக்காவர்.

என்றாவது ஒரு நாள் தந்து தீரவேண்டிய சுதந்திரத்தை, மொராக்கோ மக்களின் இந்த 'இறுதி எச்சரிக்கை'க்குப் பிறகும் தருவதற்கு பிரெஞ்சுக்காரர்கள் மறுத்தால், அதன் விளைவுகளை அவர்கள் அனுபவிப்பர்!

வேலையில்லாத் திண்டாட்டம்

விசாரித்தறிய நிபுணர் குழு

புதுடில்லி, ஆக. 24—

இந்தியாவில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் குறித்து—குறிப்பாக, படிக்காத பாமரர்களிடை நிலவும் வேலையின்மை குறித்து விசாரித்தறிய, நிபுணர்களடங்கிய குழு ஒன்றை நியமிக்க தேசீயத் திட்டக் குழு எண்ணியுள்ளதாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வழிவகை காணுவதே இந்தக் குழு அமைக்கப்படுவதின் நோக்கமாம்.

வேலை தேடித்தரும் நிறுவனங்கள்

மாநிலங்களுக்கு நிர்வாக மாற்றம்!

மார்ச்சு திங்களில் நிகழுமாம்

கர்னூல், ஆக. 24—

"இப்போது மத்திய சர்க்கார் தொழிலாளர் இலாகாவின் நிர்வாகத்தின்கீழ் உள்ள வேலை தேடித் தரும் நிறுவனங்களின் பொறுப்பை மாநிலங்களுக்கு மாற்றுவது வரும் 1956 மார்ச் திங்களில் நடைபெறக்கூடும்," என்று, வட்டார வேலை தேடித் தரும் அதிகாரியான பி. கே. புஷ்பராஜ் என்பார் தெரிவித்திருக்கிறார்.

துவக்கத்தில், இந்த நிர்வாக மாற்றம் இந்த ஆண்டு செப்டம்பர் முதல் தேதியன்று நிகழுவதாயிருந்தது; ஆனால், நிர்வாக மாற்றம் பற்றி மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுடன் நடத்திவரும் 'பேரம்' இன்னும் நீடித்துக்கொண்டிருப்பதாலேயே தாமதம் என்றும் அந்த அதிகாரி தகவல் தந்திருக்கிறார்.

பிரெஞ்சு மந்திரி சபை 'சரிதம்' தொடருகிறது

பாவ்ரே பதவிக்கு தலைவலி

மொராக்கோவிற்கு சுதந்திரம் கூடாதாம்!

லண்டன், ஆக. 24—

மொராக்கோவுக்கு 'சுதந்திரம்' வழங்கும் விஷயத்தில் பிரெஞ்சு மந்திரி சபையில் பிளவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

எம். பினய் என்ற வெளிவிவகார இலாகா மந்திரி, ஜெனரல் கோனிக் என்ற தற்காப்பு மந்திரி ஆகியோர் சார்ந்திருக்கிற கட்சித் தலைவர்கள், மொராக்கோ பிரதிநிதிகளுடன், சர்க்கார் பேச்சு வார்த்தை நடத்துவதை விரும்பவில்லை என்று தெரிகிறது.

இப்போது விரட்டப்பட்ட சுல்தானுக்குப் பதிலாக உள்ள பென் அராபா என்ற சுல்தானை வெளியேற்றுகிற வகையில் பேச்சு வார்த்தைகளின் முடிவு இருக்குமானால், தாங்கள், கூட்டு மந்திரி சபைக்குத் தரும் ஆதரவை நிறுத்திக்கொள்வதாக 175 உறுப்பினர் பலம் கொண்ட வலதுசாரிக் கட்சியினர் முதன் மந்திரி பாவ்ரேயை அச்சுறுத்தியிருக்கின்றனராம்.

'மொராக்கோ பிரதிநிதிகள் என்போர், கொலைகாரர்களின் பிரதிநிதிகள்; எனவே, அவர்களுக்கு சுதந்திரம் வழங்குவதற்கான பேச்சு வார்த்தைகள் கூடாது' என்று, மந்திரிகள் பினய், கோனிக் இருவரும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனராம்

பிரதம மந்திரி பாவ்ரே அவசர அவசரமாக மந்திரி சபைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறாராம்.

நாடு கடத்தப்பட்டுள்ள பென்-யூசுப்பை, நாடு திரும்புவதற்கு அனுமதிக்கலாம் என, பிரெஞ்சுப் பிரதமர் கருதுகிறாராம்.

'ரிசர்வ்' படைகளா?

வட ஆப்பிரிக்காவுக்கு அனுப்புவதற்காக 50,000 முதல் 60,000 வரை 'ரிசர்வ்' படைகளைத் திரட்டப் போவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்ஜீரியாவிலுள்ள பிரெஞ்சுப் படைகளுக்கு உதவியாக ஆறு பட்டாளங்களை உடனடியாக அனுப்ப பிரெஞ்சு உத்தேசித்துள்ளதாம்.

ஒரே நாள் கணக்கு!

நடந்த சனியன்று அல்ஜீரியாவில் நடைபெற்ற தாக்குதல்களில் சுமார் 1,000 கலகக்காரர்கள் கொல்லப்பட்டதாகவும், இராணுவத்தினரில் 25 பேர் மாண்டுவிட்டதாகவும் அதிகார வட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

முக்கூட்டு பிரதிநிதிகள் மாநாடு நடைபெறும்

தொழிலாளர் 'நலன்' பற்றிய

ஐக்கிய கேரளத்தில் திரு-தமிழகம்?

தமிழர் 'தலைவர்'கள் முடிவு என்ன?

திருவனந்தபுரம், ஆக 25—

"திரு - கொச்சி மாநிலத்தில் இணைந்துகிடக்கும் திரு-தமிழகத்தினை, நிரந்தரமாக திரு-கொச்சியிலேயே வைத்திருப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகிறது," என்ற திடுக்கிடும் தகவலை, திருவனந்தபுரத்திலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தந்திருக்கிறது.

ஐக்கிய கேரளத்தில், தென் திருவிதாங்கூர் (திரு-தமிழகம்) நிரந்தரமாக இடம் பெறுவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாயும், அதற்கு முதன் மந்திரி பனம்பள்ளியின் 'அரசியல் திறனு'ம் துணை நிற்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்த முயற்சி குறித்து மலையாளப் பத்திரிகை ஒன்று தலையங்கம் எழுதியிருப்பதாகவும், அந்தத் தலையங்கத்திற்குப் பின்னால் மந்திரிகளின் ஆதரவும் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

தனி மாவட்டம், மொழிச் சுதந்திரம் முதலியனவற்றில் தமிழர்களுக்கு சில உறுதி மொழிகளைத் தந்து, ஐக்கிய கேரளத்தில் அவர்களை இருக்குமாறு தூண்டவும் முயற்சிகள் நடைபெறுமாம்.

திரு-தமிழகம் தாய்த் தமிழகத்துடன் இணைந்தால் அவர்களது வளர்ச்சி பின்தங்கும் என்றும், முன்னேற்றம் 15 ஆண்டுகளுக்குத் தடைபடும் என்றும் தமிழர்களிடம் பிரச்சாரம் செய்யப்படுமாம்.

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை வெளியாகுமுன்பே, தமிழர்களுக்கு மனமாற்றத்தை உண்டுபண்ணி, மாறிய கருத்தை, குழுவிற்கு அறிவிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்.

"தமிழர்களிடம் ஐக்கிய தமிழகம் பற்றிப் பிரச்சாரம் செய்து வந்த நாங்கள், இப்போது எப்படி அவர்களிடம் மாற்றிக் கூறுவது?"

என்று கூறுகிற திரு-தமிழக சட்ட சபை உறுப்பினர்களுக்கு, மாற்றிக் கூறுவதற்கான வழிகளையும் சொல்லித் தருகின்றனராம், மலையாளத் தலைவர்கள்!

திரு-தமிழக சட்டசபை உறுப்பினர்கள், தமிழர்களுக்குத் தந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விடப்போகின்றனரா என்பதைச் சற்றுப் பொறுத்து தெரிந்து கொள்ளமுடியும் என்றும் கூறப்படுகிறது.

தனியாக உத்தியோகம் தருவது சாத்தியமில்லை'

அமைச்சர் கூறுகிறார்

"பிற்பட்ட வகுப்பினருக்கு சர்க்கார் துறைகளில் உத்தியோகங்கள்

...க. 31-ந் தேதியன்று புது... ...யில், தேயிலை, காப்பி ரப்பர், ...ப்பு தோட்ட முதலாளிகள்—...ழிலாளிகள்—சர்க்கார் பிரதி...கள் அடங்கிய ஒரு முக்கூட்டு ...டு நடைபெறும்.

...தொழிலாளருக்கு போனஸ் ...து, பிராவிடண்ட் நிதி ஆரம் ...து ஆகியவை பற்றிய பிரச் ...களும், தகராறிலுள்ள வேறு ...ம் மாநாட்டில் விவாதிக்கப் ...

...ந்திய பணித் தேர்வுக் குழு

செலவு விபரங்கள்

...ந்த 1952—53 முதல் 1954 ... ஆண்டு வரையுள்ள காலத் ...மத்திய பணித் தேர்வுக் குழு ...ிக் சர்வீஸ் கமிஷன்) பரி ...கர்களுக்கு, 'படி'யாக ரூ. ...,000-மும், விளம்பரங்களுக்கு ...,57,000-மும் செலவிட்டிருக் ...ராம்.

...அதிகப்படியாக அவர்கள் பெறுவது தடை செய்யப்படவில்லை," என்று, மேல் (சட்ட) சபையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

"மக்கள் தொகைக்கு ஏற்றபடி, வன்னிய குல மக்களுக்கு உத்தியோகம் தரப்படுகிறதா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், தனியாக உத்தியோகம் தருவது சாத்தியமில்லையென்றும், பிற்பட்ட வகுப்பினர் எல்லோருக்கும் சேர்த்தே உத்தியோகங்கள் தருவது கவனிக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

பரீட்சார்த்த முறையில் நடத்துவராம்!

சில இரயில்வே நிலையங்களில், பரீட்சார்த்த முறையில், இரயில்வே இலாகாவே சிற்றுண்டிச்சாலைகளை நடத்திப்பார்க்க உத்தேசித்திருப்பதாகவும், எந்தெந்த நிலையங்களில் நடத்துவது என்பது இன்னும் முடிவாகவில்லை என்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்காசனம் ஏற்றும் வரையில், பிரெஞ்சு சர்க்கார் மீது தங்களுக்கு நம்பிக்கை ஏற்பட முடியாது என்று, மொராக்கோ தேசியவாதிகள் தெளிவாகத் தெரிவித்தனர்; எச்சரித்தனர்; ஆனாலும், பிரெஞ்சு சர்க்காருக்கு, மொராக்கோ மக்களின் விடுதலை வேட்கையைப் புரிந்து கொள்ள முடியவில்லை; அவர்களது விடுதலை வேட்கையைக் காலந்தாழ்த்துவதின் மூலமும், அடக்குமுறையின் மூலமும் கருகிப்போகச் செய்துவிடலாம் என நினைத்தனர்.

பிரெஞ்சு சர்க்காரின் இந்தப் போக்கு, மொராக்கோ தேசியவாதிகளிடையே சில தீவிரவாதிகளை உண்டாக்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

நவீன கால, அரசியல் வளர்ச்சியைப் புரிந்து கொண்டு, நாகரிக வழியில் அமைதியாக விடுதலையைப் பெறும் வழிவகைகளை

விடாப்பிடியாக, 'தங்களின் கைப்'பாவை'யை மொராக்கோ மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்'—என்று, எதிர்பார்த்தனர்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் முரட்டுப் பிடிவாதத்தைத் தகர்க்க, பென் யூசுப்பின் பதவி பறிக்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நினைவு நாளன்று மொராக்கோ மக்கள் தங்களிடமிருந்த சிறுசிறு வேற்றுமைகளையும் மறந்து, பெரும் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

குடியேற்றக்காரர்களாயிருக்கும் வெள்ளையர்களும், தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கெனக் கூறி வழக்கமான தங்களின் பலாத்காரத் தாக்குதலில் ஈடுபட்டனர்; விளைவு, எண்ணற்ற வெள்ளையர் உட்பட சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான பேர் உயிரிழந்தனர்.

ஒரு இலட்சம் பிரெஞ்சுத் துருப்புகள் நிலைமையைச் சீர்

முகமது அலி நியமனம

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் முகமது அலி, அமெரிக்காவில் பாக். தூதுவராகப் பணியாற்றுமாறு பணிக்கப்பட்டு விட்டாராம்; ஐ. நா. அசெம்பிளிக் கூட்டத்திற்கு பாக். பிரதிநிதிகள் குழுவின் தலைவராகவும் அவர் இருப்பாரெனக் கூறப்படுகிறது. ஆக. 26-ந் தேதியன்று அவர், அமெரிக்காவுக்குப் புறப்படுகிறாராம்.

போனஸ் ஒப்பந்தத்தில் 61 ஆலைகள் சேருமாம்

ஆமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்திற்கும்—மில் சொந்தக்காரர்கள் சங்கத்திற்கும் ஏற்பட்டுள்ள ஐந்தாண்டு 'போனஸ்' ஒப்பந்தத்தில், மொத்தமுள்ள 64 பஞ்சு ஆலைகளில் 61 ஆலைகள் சேரக்கூடுமாம்.

இந்தியக் கப்பல்களின் சரக்கேற்றிச் செல்லும் சக்தி சென்ற மூன்று ஆண்டு காலத்தில் மொத்தம் 40,000 டன் அதிகரித்திருக்கிறது.

நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் அண்ணா அவர்களின் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில் கோவில்பட்டி, புளியங்குடி, கடையநல்லூர், முக்கூடல் ஆகிய இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்ட, வரவேற்புச் செய்தி விபரங்கள் ஏற்கனவே 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டுள்ளன. அவை நீங்கலாக மற்ற இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இங்கு தரப்படுகிறது :—

சங்கரன்கோயில் :

16—8—55 இரவு 9-30 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் அ. பொன்னம்பலனார், அண்ணா ஆகியவர்கள் சமூக, அரசியல், பொருளாதார விடுதலை குறித்தும், மும்முனைப் போராட்டங்கள் குறித்தும், மாநில மாநாடு பற்றியும் விரிவுரையாற்றினர்.

பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டன. பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தென்காசி :

17—8—55 இரவு 11 மணிக்கு தி மு. கழகச் சார்பில் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது

அண்ணா அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி, 'ஐந்தாண்டுத் திட்டத்தினால் திராவிட நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன? வடநாட்டாருக்கும், வடநாட்டு அகதிகளுக்கும் ஏற்பட்ட நன்மைகள் என்ன?' என்பதையும், நம் நாட்டுச் செல்வம் வடநாட்டு ஆதிக்கத்தால் சுரண்டப்பட்டு வருவதையும் விளக்கினார்.

பாவூர்சத்திரம் :

பாவூர்சத்திரம் தி. மு கழகத் தோழர்கள், 18—8—55 மாலை 6-30 மணிக்கு, அண்ணா அவர்களை வரவேற்று மலர்மாலைகள் சூட்டி, வரவேற்புரை படித்துக் கொடுத்தார்கள். கைத்தறி ஆடைகளும் வழங்கினர். அண்ணா அவர்கள் வரவேற்புக்கு நன்றி கூறி, தி மு கழகக் கொள்கைகளைச் சுருக்கமாக விளக்கிக் கூறினார்.

கீழப்பாவூர் :

18—8—55 காலை கீழப்பாவூர் தி மு. கழக புதிய கட்டிடத் திறப்பு விழா நடைபெற்றது. இரவு $6\frac{1}{2}$ மணிக்கு, பாண்டியன் மைதானத்தில் தோழர் கே வி கே. சாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இராசகோபால், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்கள் மூடநம்பிக்கையைப் பற்றியும், சாதிமுறை ஒழியவேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார்.

அண்ணா அவர்களுக்கு பூலாங்குளம், பாவூர்சத்திரம் ஆகிய கிளைக் கழகங்களின் சார்பில் மாலையணிவிக்கப்பட்டது. கீழப்பாவூர் தி. மு. கழகச் சார்பில் அண்ணா அவர்களுக்கு கைத்தறி வேட்டியும், துண்டும் அணிவிக்கப்பட்டது.

மாநில மாநாட்டு நிதிக்காக ஏற்கனவே கொடுத்திருந்த தொகை ரூ. 55 போக, மேலும் ரூ. 125 கொடுக்கப்பட்டது.

விக்கிரமசிங்கபுரம் :

19—8—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அண்ணா அவர்கள், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று கூறுவதின் நோக்கம் பற்றி விளக்கினார். சமூக, அரசியல், பொருளாதார விடுதலை குறித்தும், வடவர் ஆதிக்கம் பற்றியும் விளக்கினார். பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டது.

வீரவநல்லூர் :

19—8—55 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. வி. இராசகோபால், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசியபின்னர், அண்ணா அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் படும் துயரம் பற்றியும், தி. மு. கழகம் சமூக, அரசியல், பொருளாதார விடுதலைக்குப் பணியாற்றிவருவதை விளக்கியும் பேசினார். அண்ணா அவர்களுக்கு பல கிளைக் கழகங்களின் சார்பாக மலர் மாலைகள் சூட்டப்பட்டது.

அம்மன்புரம் :

20—8 [illegible] மாலை $4\frac{1}{2}$ மணிக்கு, தோழர் [illegible]ர்—தோழியர் வீரமணி ஆகியோர் திருமணம் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில், புரோகிதச் சடங்குகள் ஒழிந்ததும், அறிவுக்குப் பொருத்தமானதும்; ஆடம்பர வீண் செலவுகளற்றதுமான சீர்திருத்தத் திருமணங்கள் நாட்டில் பெருக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மணமக்களைப் பாராட்டி தோழர்கள் சி. வி. இராசகோபால், எஸ்.எஸ். சிவசூரியன், கே.வி கே. சாமி, அண்ணா ஆகியவர் பேசினார்கள்.

மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பு தரப்பட்டது.

தி. மு. கழகச் சார்பில், அண்ணா அவர்களுக்கு வரவேற்பு மடல் படித்துக் கொடுக்கப்பட்டு, மலர் மாலைகளும் சூட்டப்பட்டது.

ஆத்தூர் :

20—8—55 இரவு $6\frac{1}{2}$ மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் மா. வெ. செல்லையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரை கூறி யாவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர்கள் சி. வி. இராஜகோபால், எஸ் எஸ். சிவசூரியன் அ. பொன்னம்பலனார், கே. வி. கே. சாமி ஆகியோர் பேசிய பின், அண்ணா அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார். கழகச் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி துண்டுகளும் வழங்கப்பட்டது.

சிவத்தியாபுரம் :

20—8—55 இரவு $10\frac{1}{2}$ மணிக்கு தி மு. கழகச் சார்பில், தோழர் எஸ். எஸ். பாண்டியன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. வி. இராசகோபால், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசிய பின், அண்ணா அவர்கள் தி. மு கழகக் கொள்கைகளையும், திராவிடத்தின் இழிநிலையை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

தூத்துக்குடியில் தேநீர் விருந்து

21—8—55 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு, தூத்துக்குடி நகர தி. மு கழகச் சார்பில் நடைபெற்ற தேநீர் விருந்தில் தி மு கழகத் தோழர்கள் திரளாகக் கூடியிருந்தார்கள்.

தேநீர் விருந்துக்குப் பிறகு தோழர் எம் எஸ் சிவசாமி அவர்கள் அண்ணா அவர்கட்கு மலர்மாலைகள் சூட்டி வரவேற்றார்.

அண்ணா அவர்கள் கழகத் தோழர்கள் தங்களிடையே பிளவுகள் நீங்கி, நேசப்பான்மையுடன் தி. மு. கழகக் கொள்கைகள் பரவப் பணியாற்ற வேண்டுமென்றும், எதிர்காலத்தில் நல்ல பல திட்டங்களை உருவாக்க தோழர்கள் ஒத்துழைப்பும், கூட்டுறவும் அவசியம் தேவைப்படும் என்றும், அவர்கள் உதவி என்றும்போல் கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது என்றும் கூறினார்.

பொதுக் கூட்டம்

தூத்துக்குடி நகர தி. மு கழகச் சார்பில், வ. உ. சி. திடலில், 21—8—55 இரவு 7 மணிக்கு தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் சி. வி. இராசகோபால், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசிய பின், அண்ணா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை விளக்கியும், வடவர் ஆதிக்கம், ஐந்தாண்டுத் திட்டம், மும்முனைப் போராட்டம், சதி வழக்கு, அடக்குமுறைகள் ஆகியவைபற்றியும்விரிவுரையாற்றினார்.

அண்ணா அவர்கட்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டது. கோவா அடக்குமுறை வெறிச் செயல் பற்றி கண்டனத் தீர்மானமும், தூத்துக்குடி சதிவழக்கில் இருவருக்கு 2 ஆண்டு காலம் சிறைவாசம் தண்டனை விதித்திருப்பதை ரத்து செய்து, விடுதலை செய்யும்படி அரசியலாரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதியம்புத்தூர் :

21—8—55 இரவு 11 மணிக்கு, தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. வி. இராசகோபால், அ. பொன்னம்பலனார், ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்கள் சமூக, அரசியல், பொருளாதார விடுதலை குறித்தும், பிற நாட்டவர் விஞ்ஞான வளர்ச்சியுடன் முன்னேற்றமடைந்துவரும் போது, நாம் மட்டும் பழைமையில் மோகம் கொண்டு சாதி சமய மதப் பூசல்களில் சிக்கி நலிவடைந்து வருவதையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினார்.

★

மதுரைக்கு வருகை

நெல்லை மாவட்ட சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு அண்ணா, மற்றும் தோழர்கள் அ. பொன்னம்பலனார், சி. வி இராசகோபால் ஆகியவர்கள் 22—8—55 காலை மதுரை வந்து சேர்ந்தனர்.

உடைந்த நாற்காலி!

புதுடில்லி, ஆக. 23—

மக்கள் சபைச் செயலாளர் எம். என். கவுல் என்பாரது சுற்றும் நாற்காலி, பெருத்த சத்தத்துடன் இன்று இரண்டாக உடைந்ததாம்!

அதனால் கீழே விழுந்த அந்தச் செயலாளருக்கு காயம் எதும் படவில்லையாம்.

இதனால் சிறிதுநேரம் சபையின் அலுவல்கள் தடைப்பட்டனவாம்!

'அப்பீல்' செய்தனர்

அமிர்தசரஸ், ஆக. 20—

நான்கு மாத கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூ 400 அபராதமும் விதிக்கப்பட்டுள்ள அகாலி தளத் தலைவரான மாஸ்டர் தாரா சிங், சர்தார் டல்ஜித் சிங் ஆகியோர் தண்டனையை எதிர்த்து 'செஷன்ஸ்' நீதி மன்றத்தில் 'அப்பீல்' செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

எதிர்க்கவில்லையாம்!

ஆசியாவில், கூட்டு சமாதான ஒப்பந்தம் ஒன்றை வகுக்கலாம் என்று சீனப் பிரதமர் தெரிவித்த யோசனையை இந்திய சர்க்கார் எதிர்க்கவில்லையாம்.

தாயகம் திரும்பும் 'புரட்சித் தலைவர்'

நடைபெற்ற சம்பவங்கள் மீது ஒரு 'கண்ணோட்டம்'

புதுடில்லி, ஆக. 28—

நேபாளப் புரட்சித் தலைவரான டாக்டர் கே. ஐ சிங், இம்மாத இறுதியில் நேபாளம் திரும்புவார் என்று தெரிகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் சீனாவுக்கு ஓடிப்போன இவர், திபெத் வழியாக நேபாளம் திரும்புகிறார்.

கடந்த ஜூன் திங்களில் பீகிங்கைவிட்டு புறப்பட்டார்.

சீனாவில் இவரது நடவடிக்கைகள், நேபாள சர்க்காருக்கு மிகுந்த கவலையைத் தந்து வந்தன; மேலும் நேபாளத்தில் இவருக்கு 'பிராபல்யம்' அதிகரித்துக் கொண்டே வந்தது.

எதிர்பாராத விதமாக, பாண்டுங் மாநாட்டிற்குச் சென்றிருந்த நேபாளத் தூதுக் குழுவிடத்தில் சீனப் பிரதமர் சௌ-என்-லாய், டாக்டர் சிங்கும் இதரரும் தாயகம் திரும்ப விரும்புவதாயும், அவர்கள் தாயகம் திரும்பினால் அவர்களைக் கைது செய்யவோ, பழி வாங்கவோ கூடாது என்றும் தகவல் தந்தார்.

டாக்டர் சிங், தோல்வி கண்ட புரட்சிவாதியாக நேபாளத்திற்கு திரும்புவது; சீனாவில் அவர் ஒரு பிரசித்தி பெற்ற புரட்சிக்காரராயிருப்பதைக் காட்டிலும் குறைந்த ஆபத்துக் கொண்டது என்பதால், சீனப் பிரதமர் கூறியபடி, டாக்டர் சிங் திரும்புவதை நேபாள சர்க்கார் ஏற்றுக்கொண்டனர்.

இந்த நான்கு ஆண்டுகளிலும், சிங், சீனாவில் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்ததோடு, இமாலய எல்லையிலிருந்து சீனாவின் உதவியுடன் நேபாளத்தில் ஒரு புரட்சி இயக்கத்தைத் தோற்றுவித்து நடத்திச் செல்ல முடியுமெனக் 'கனவு' கண்டுகொண்டிருந்திருக்கிறார்.

சிற்சில நேரங்களில் நேபாள மக்களுக்கு, வானொலி மூலம் சீனாவிலிருந்து பேசுவார்.

கடந்த ஆகஸ்டில் சீனப் பிரதமர் டில்லி வந்து, சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுவிட்டுச் சென்ற சில நாட்களுக்கெல்லாம், பீகிங் நகரில் பொதுக் கூட்டமொன்றில் டாக்டர் சிங் தோன்றி, நேபாளத்தை விடுவிக்கப்போவதாக சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிறார்.

உடனே இந்திய சர்க்கார், தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

உடனே சீன சர்க்கார் மன்னிப்புக் கோரியதுடன், டாக்டர் சிங் வானொலி மூலம் பேசுவதை நிறுத்தினர்.

பின்னர்தான், டாக்டர் சிங்கை நேபாளத்திற்கு திருப்பி அனுப்பி விடுவதே உசிதம் என்றெண்ணிய சீனப் பிரதமர், பாண்டுங் மாநாட்டில், நேபாளப் பிரதிநிதிகளிடம் இதுபற்றிப் பேசி, இப்போதைய முடிவுக்கு வந்தனர்.

இரண்டாம் திட்டத்தில் சர்க்கரை உற்பத்தி

இலட்சியஎல்லை22.5லட்சம்டன்

புதுடில்லி, ஆக. 28—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சர்க்கரை உற்பத்திக்கு 22.5 லட்சம் டன் என்று இலட்சிய எல்லையாக சர்க்கரை உற்பத்திக்கான அபிவிருத்திக்குழு நிர்ணயித்துள்ளது.

இப்போதுள்ள ஆலைகளின் உற்பத்தியின் சக்தியை அதிகரிப்பதின் மூலம் இந்த இலட்சிய எல்லையை அடைய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

மத்திய சமுதாய க்ஷேமநல போர்டு, நாட்டில் உள்ள 1850 இஷ்ட சேவா நிறுவனங்களுக்கு, சகாயத் தொகையாக இதுவரை மொத்தம் ரூ. 71 லட்சம் வழங்கியிருக்கிறது.

மாட்டு வண்டிகளுக்கு ரப்பர் டயர்?

நிதி உதவி அளிக்கப்படுமாம்!

பாதைகள் பழுதாவதைத் தடுப்பதற்காக, மாட்டு வண்டி சக்கரங்களுக்கு காற்றடைத்த ரப்பர் டயர் போடுவதற்காக, அதன் சொந்தக்காரர்களுக்கு உதவி மானியத் தொகை அளிப்பதற்கான திட்டமொன்று, மத்திய ஆட்சியின் பரிசீலனையில் உள்ளதாம். மாநில சர்க்கார்கள் இவ்வுதவியை அளிப்பதற்காக, $1\frac{1}{2}$ கோடி ரூபாயை மத்திய சர்க்கார் ஒதுக்குமாம்; டயர்களின் விலையில் பாதி மானியமாக அளிக்கப்படுமாம்.

இந்தியாவில் விளைச்சல் அதிகமாம்!

பிரம்மிக்கத்தக்கஅளவில் சாகுபடி பரப்பளவு உள்ளதாம்!

வெப்பப் பிரதேசங்களைவிட, குளிர்ப் பிரதேசங்களில் நெல் விளைச்சல் அதிகமாக இருக்கிறதாம்!

இந்தியாவில்தான் விளைச்சல் அதிகமாம்; சமீப ஆண்டுகளில், இந்தியாவில் சாகுபடி பரப்பளவு பிரம்மிக்கத்தக்க அளவில் பரவலாக்கப்பட்டிருக்கிறதாம்; அதனால், ராசி குறைவாக இருந்தாலும் மொத்த உற்பத்தி அதிகரித்திருக்கிறதாம்.

பர்மா; ஜப்பான், இந்தோனேசியா நாடுகளில் சாகுபடி பரப்பளவு பெருகவில்லை என்றாலும், விளைச்சல் அதிகம்; தென்கிழக்கு ஆசிய நாடுகளில், பர்மாதான் அதிகமாக அரிசி ஏற்றுமதி செய்கிறது.

இந்தியக் கப்பல்களுக்கு ரேடியோ சாதனங்கள்

'இந்தியா ஸ்டீம் நாவிகேஷன்' கம்பெனிக்காக ஜெர்மனியில் கட்டப்படும் மூன்று கப்பல்களுக்கு, பிரிட்டிஷ் ரேடியோ சாதனங்களை அமைக்க நிச்சயித்திருக்கிறார்கள்.

டிரான்ஸ் - மீட்டர்கள், 'அட்லான்டா' ரிசீவர், 'ஆடோ டி' அபாயச் சங்கு, அபாய கால அவசர 'மார்கோனி' ரிசீவர், ரேடியோ திசைக் கருவி — இவைபோன்ற சாதனங்களே அவைகளாகும்.

யானைக்கால் நோய் : தடுப்பதற்குத் திட்டம்

இந்தியாவில் யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுக்கான தேசிய திட்டத்தின் கீழ் சேவை செய்யப் போகும் 25 அதிகாரிகளுக்கு, இந்திய மலேரியாத் தடை நிறுவனத்தாரால் எர்ணாகுளத்தில் நிறுவப்பட்டிருக்கும் யானைக்கால் நோய் சிகிச்சை பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் 19-ந் தேதி பயிற்சி ஆரம்பமாயிற்று.

இந்த யானைக்கால் வியாதி கொசுவினால் ஏற்படுவது; நாட்டில் 13 மாநிலங்களில் இவ்வியாதி அதிகமாக இருந்துவருகிறது. இது மலேரியாவுக்கு அடுத்த பெரிய நோயாகும். இந்தத் தடைத் திட்டத்திற்கு ரூ. 109.8 லட்சம் செலவாகுமாம்.

இந்தியாவில் கனி இரும்பு உற்பத்தி

இந்தியாவில் உள்ள இரும்புக் கனிச் சுரங்கங்களில், உற்பத்தியான கனி இரும்பின் மொத்த அளவு, 1955 மே மாதத்தில் 8,78,835 டன்னாக இருந்தது; 1955 ஜூன் மாதத்தில் 8,18,700 டன்னாகக் குறைந்துள்ளதென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

உருளைக் கிழங்கு சாகுபடி

கடப்பு ஆண்டில் மொத்தம் 6,39,000 ஏகராவில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதென்றும், மொத்தம் 16,00,000 டன் உற்பத்தியாகுமென்றும் தெரியவருகிறது.

'கன ரகத் தொழில்கள் எல்லாம் வட நாட்டிலேயே'

'தென்னாட்டில் ஒன்றுகூட இல்லை'

சென்னை சட்டசபையில் ஐந்தாண்டுத் திட்ட விவாதம் : கிருஷ்ணமூர்த்தி கண்டனம்

" சென்னை சர்க்கார் தயாரித்த நகல் திட்டத்தை டில்லி தேசீய திட்டக்குழு பாதியாக வெட்டிவிட்டது கண்டிக்கத்தக்க ஒன்றாகும் ;

" கன ரகத் தொழில்கள் எல்லாம் வட நாட்டிலேயே நிறுவப்படுகின்றன ; தென்னாட்டில் ஒரு கன ரகத் தொழில்கூட நிறுவப்படவில்லை ;

" முக்கியமான தொழில்களும், விவசாயமும்கூட கூட்டுறவு முறையிலேனும் அல்லது சர்க்கார் பொறுப்பிலேனும் மேற்கொள்ளப்பட வேண்டும்,"

—என்று, தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி (திராவிட சட்டசபைக் கட்சி) சென்னை சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :–

" இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான சென்னையின் நகல் திட்டம் பற்றிய சட்டசபை விவாதத்தில், மலபாரைச் சேர்ந்த காங்கிரசல்லாத இதர கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளாது ஒதுக்கிநிற்கின்றனர் ; இதற்குக் காரணமெல்லாம், மொழி வழியில் மாநிலங்கள் அமையாததுதான்.

" தனி ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டபோதே இதர மொழி வழி மாநிலங்களும் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் ;

" சுதந்திர தமிழ் மாநிலம் உடனடியாக அமைக்கப்படவேண்டும் ; இதற்கு சென்னை சர்க்கார் முயற்சித்தாக வேண்டும்."

விவாத நிலைமை

சென்னை சட்டசபையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட நகல் பற்றிய விவாதம் இன்று தொடர்ந்து நடைபெற்றபோது 16 உறுப்பினர்கள், சென்னையில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டியதின் அவசியம் குறித்தும், தொழில் வளர்ச்சிக்கு நாட்டில் உள்ள வாய்ப்புகள் பற்றியும் விளக்கியிருக்கின்றனர்.

தங்கள் தங்கள் தொகுதிகளில் துவக்கப்படக்கூடிய தொழில்கள் பற்றி விரிவான யோசனைகளையும் உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

சில உறுப்பினர்கள், மலபார் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொள்ளாதது குறித்து வருத்தம் தெரிவித்தனர்.

மான்சிங் சுட்டுக் கொல்லப்பட்டான்

வடநாட்டுப் பிரபல கொள்ளைக்காரன்

இந்தூர், ஆக. 25—

உத்திர பிரதேசம், மத்திய பாரத் ஆகிய மாநிலங்களில் ஒரு பெரும் கொள்ளை இயக்கத்திற்கு தலைமை தாங்கிவந்த மான்சிங் என்ற கொள்ளையர் தலைவன், நேற்று, காசே சபூரா எனும் கிராமத்தில், போலீசாருக்கும்—மான்சிங்கின் கொள்ளையர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதுதலின்போது சுட்டு வீழ்த்தப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

மத்திய பாரத் போலீஸ் மந்திரியான நரசிங்கராவ் டிக்சிட் இந்தத் தகவலை நேற்று இரவு பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மான்சிங்கின் சடலம், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் மருத்துவ மனை ஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

இரண்டு நாட்களுக்கு முன்பாக கொள்ளையர்களுக்கும் — போலீசாருக்குமிடையே தாக்குதல் துவங்கியதாம்.

20 நிமிடங்கள் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில், மான்சிங், ஒரு போலீஸ்காரர் ஆகிய இருவரும் மாண்டனராம். பல போலீசாருக்குக் காயம் ஏற்பட்டதாம்.

மான்சிங் கொல்லப்பட்ட செய்தி மத்திய பாரத் போலீஸ் மந்திரியாலும், உத்திர பிரதேச முதன் மந்திரியாலும், டெலிபோன் மூலம் புதுடில்லியிலிருக்கும் மத்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்திற்கு அறிவிக்கப்பட்டதாம்

மான்சிங் கொல்லப்பட்ட செய்தி கேட்டு, பண்டித பந்த் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

4,000 சணல் ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

ஆலை நிர்வாகியை 'சிறை' வைத்தனராம்

கல்கத்தா, ஆக. 25—

இங்குள்ள சணல் ஆலை ஒன்றில் வேலை செய்யும் சுமார் 4,000 - தொழிலாளர்கள், அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்திற்கு, தொழிலாளர்களின் பங்குத் தொகைக்காக அவர்களின் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளுவதை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் என்று தெரிகிறது.

அவர்கள் இன்று ஆலையின் நிர்வாகியையும், இதர குமாஸ்தாக்களையும் அவரவர் அறைகளிலேயே 'சிறை' வைத்து, வெளியேற முடியாது செய்துவிட்டனராம் !

' தங்களுக்காக நிர்வாகிகளே அந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டத்திற்கு பணம் கட்டவேண்டும்,' என்று தொழிலாளர்கள் கோருகின்றனராம் !

ஆலையின் மின்சார, டெலிபோன் தொடர்புகளைத் துண்டித்துவிட்டதுடன், கட்டிடத்தின் மீது கல் கொண்டு தாக்குதலும் நடத்தினராம்; அதன் விளைவாக அங்கு காவல் நின்ற மூன்று போலீசாருக்குக் காயமேற்பட்டதாம்.

வேறு ஒரு சணல் ஆலைத் தொழிலாளர்களால், தொழிலாளர் அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அந்த வட்டாரத்தில் உள்ள வேறு ஒரு சணல் ஆலைத் தொழிலாளர்கள், இதே கோரிக்கைக்காக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்கின்றனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

விஜயவாடா, ஆக. 25—

40 பேர் இருந்ததாகச் சொல்லப்படும் நீராவிப் படகு ஒன்று, கிருஷ்ணா நதியில் விபத்துக்குள்ளாகிக் கவிழ்ந்ததல்லவா ? விபத்திலிருந்து 23 பேர் மீட்கப்பட்டுவிட்டதாகவும், 9 பேர் காணப்படவில்லையென்றும், ஒருக்கால் இவர்கள் மூழ்கி மாண்டிருக்கலாமெனக் கருதப்படுவதாகவும் செய்திகள் அறிவிக்கின்றன.

மாநிலமாநாட்டுநிதிக்கு சிறப்புச் சொற்பொழிவு

★

கடலூர் (என். டி.)

நியூ சினிமாவில்

28–8–55 காலை 9 மணிக்கு

தலைவர்: புதுவை சிவப்பிரகாசம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

ஏ. கோவிந்தசாமி

நன்கொடை அணா 8, 4

கழகக் கூட்டங்கள்

★

வாணியம்பாடி

பொன்னியம்மன் கோயிலருகில்

28–8–55 மாலை 6 மணிக்கு

தலைவர் : கே. பி. சாமிநாதன்

பேசுவோர்:

என். வி. நடராசன்

எம். பி. வடிவேலு

வி. என். தத்தப்பன்

★

திருச்சி

டவுன் ஹால், மைதானத்தில்

28–8–55 மாலை 6 மணிக்கு

தலைவர் : ஐ. எம். ஷரீப்

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

எம். எஸ். மணி

★

தஞ்சை

திலகர் திடலில்

28–8–55 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :

க. அன்பழகன்

சேலம் மாவட்ட தி. மு. கழக (கிளை) செயலாளர்கட்கு

மாவட்ட துணைச் செயலாளர் பி. இராமலிங்கம் அவர்கள் வேண்டுகோள்

★

தி. மு. கழக மாநில மாநாட்டுப் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்கு கீழ்க்கண்ட பொதுக் குழு உறுப்பினர்கள் 1–9–55-ந் தேதியிலிருந்து ஒரு வாரத்திற்கு கீழ்க்கண்ட வட்டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள் :—

ஆத்தூர் : எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

இராசிபுரம்: ஜி. பி. சோமசுந்தரம்.

நாமக்கல்: கே. பெருமாள்.

திருச்செங்கோடு: ப. இராமலிங்கம், இரா. தாண்டவன்.

ஓமலூர்: ப. கண்ணன்.

தர்மபுரி, கிருஷ்ணகிரி: பி. எம். குப்புசாமி.

அரூர்: எச்.எல்.முருகேசன்.

சேலம்: சிற்றுளி சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருஷ்ணன்.

11-9-55-ந் தேதியிலிருந்து, சேலம் மாவட்டத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்ய விருப்பதால், சேலம் மாவட்ட தி. மு. கழகப் பங்குத் தொகையை அவசியம் அளிக்கவேண்டியிருப்பதால், மேற்கொண்டும் தாமதிக்காமல் பாக்கித் தொகைகளை அந்த வட்டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொதுக்குழு உறுப்பினர்களிடம் கொடுத்து இரசீது பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு

" தென்னாற்காடு மாவட்டத்தில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், இத்திங்கள் 28, 29, 30, 31-ந் தேதிகளில் சுற்றுப் பயணம் செய்வார்கள் ;

" மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகங்களில் இன்னும் மாநில மாநாட்டிற்கான பங்குத் தொகையை அனுப்பாதிருப்பவை, உடனடியாக அனுப்பித் தர வேண்டுகிறேன் ;

ஃ ஃ ஃ

"28–8–55 ஞாயிறு பகல் 2 மணிக்கு, திருப்பாதிரிப்புலியூர், 'பாரீஸ் ஹால்' கட்டிடத்தில், அண்ணா அவர்கள் முன்னிலையில், மாவட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். பிரதிநிதிகள் யாவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன். பொருள்: மாநாட்டு நிதிக் கணக்கு ; புதிய கழகங்களைப் பதிவு செய்தல் ; பொதுக் குழு உறுப்பினர் ஒருவர் தேர்தல்,"

என்று தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

தஞ்சை மாவட்ட

தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்களுக்கு

" தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம், 28–8–55 ஞாயிறு காலை 11 மணிக்கு முத்துப்பேட்டையில் நடைபெறும். பொதுக் குழுவிற்கு ஒரு உறுப்பினர் தேர்தல், மாநில மாநாட்டு நிதி, செயலாளரால் கொணரப்படும் பிற விஷயங்கள் ஆய்வுக்கு வரும் ; உறுப்பினர்கள் அருள் கூர்ந்து வருகைதந்து யோசனைகள் கூறவேண்டுகிறேன்,"

என தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

பெங்களூர்— இலக்குமணபுரி தி.மு. கழக உறுப்பினர்கட்கு

28–8–55 பகல் 11½ மணி அளவில், கழக இல்லத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் அதுபோது, கிளைக் கழக ஆண்டு விழா, கழக ஆக்க வேலைகள் ஆகியவை பற்றி ஆராயப்படும்.

வள்ளுவர் தினப் பொதுக்கூட்டம்

28-8-55 மாலை 4-க்கு, இலங்கை, கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் (லயாட்ஸ் பிராட்வே), இ. தி. மு. க கொழும்பு கிளையின் சார்பில், தோழர் எம் ஐ இராசமணி தலைமையில் நடைபெறும் தோழர்கள் பா. ச. கீதம், இரா- அதி-மணி, சி. தலுவத்த, நா.பழனி நாதன், தோழியர் ஆனந்தீஸ்வரி சுப்பிரமணியம் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

26–8–55 மாலை 6½ மணிக்கு, சென்னை - முத்தியாலுப்பேட்டை சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் கி. மனோகரன் தலைமையில், ' திராவிடர் நிலை ' என்னும் பொருள் பற்றி மன்ற உறுப்பினர்கள் பேசுவர்.

பகுத்தறிவு மன்றம் துவக்க விழா

28–8–55 மாலை 5½ மணிக்கு, செங்கனூர்-சீராமபுரம் வ. உ. சி. திடலில், தோழர் எஸ் வி. பதி தலைமையில் நடைபெறும் தோழர்கள் ப. செல்வராசன், வீ. முத்து, எம். கிருட்டிணன், ந. இராமசாமி ஆகியோர் பேசுவர்.

உடற் பயிற்சி மாநாடு

28–8–55 காலை 9 மணிக்கு மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில், திரு கே. ஜே. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். திரு. கருமுத்து தி. சுந்தரம் மேற்படி மாநாட்டைத் திறந்துவைப்பார்.

மேற்பார்வையாளர்.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பரீட்சைகளை எழுதிவிட்ட பிறகு மாணவர்கள் தங்களின் விடைப் புத்தகத்தின் இறுதியில், " நான், இந்தப் பரீட்சையில் யாருக்கும் உதவியும் செய்யவில்லை ; யாரிடமிருந்தும் உதவியும் பெறவில்லை என்று என் சௌரவத்தை முன் நிறுத்தி உறுதி கூறுகிறேன்," என்று, உறுதிமொழியில் மட்டும் கையொப்பமிட வேண்டுமாம்.

இந்த 'சௌரவ முறை' சில அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் அமுல் செய்யப்பட்டிருப்பதாகவும், அங்கு இந்த முறை வெற்றிகரமாக நடப்பதாயும், கல்லூரித் தலைவராயான டாக்டர் சி. எஸ் வெங்கடேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

இன்று நடைபெற்ற பரீட்சைகள் ஒழுங்காகவே நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கதர் துணி பெறுவதில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று, வேலை நேர உடைகள் அணியாது, தங்கள் சொந்த உடைகளை அணிந்துகொண்டு வேலைக்குச் சென்றிருக்கின்றனர்.

இரண்டு ஜோடி உடைகள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்களில் ஊழியர்களுக்குத் தரப்படுவது வழக்கம் ; ஆனால் இந்த ஆண்டு இன்னமும், அந்த உடைகள் தரப்படவில்லையாம்.

" இந்த ஆண்டிலிருந்து உடைகள் கதர் துணியில் தயாரிக்கப்படுகின்றன ; கதர் துணி கிடைப்பதில் காலதாமதமாகி விட்டது," என்று, தபால் அதிகாரிகள் சமாதானம் கூறுகின்றனராம்

தில்லையாடி வள்ளியம்மை படிப்பக துவக்க விழா

28–8–55 மாலை 6 மணிக்கு, மாயூரம், (இரயிலடி தபால் நிலையத்திற்கு எதிரில்) கிராஸ் ரோடுக்கு அருகில், தோழர் இரா. சண்முகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், ஆர். பாலகுருசாமி, என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்தரராசன் ஆகியோர் பேசுவர்.

திருவள்ளுவர் விழா

28–8–55 காலை 9 மணிக்கு, மன்னார்குடி செம்பகா தியேட்டரில், மன்னார்குடி முத்தமிழ் மன்றச் சார்பில், தோழர் கோ. இரா. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் தோழர்கள் கண்ணதாசன், ரெ. முத்துக்கிருட்டிணன் ஆகியோர் பேசுவர்.

திருமணங்கள்

28–8–55 காலை 6 மணிக்கு, பெரிய காஞ்சீபுரம், எண் 90, இராஜ வீதியில், தோழர் இரா. கண்ணன்—தோழியர் வேணி திருமணம் நடைபெறும்.

* * *

28–8–55 காலை 9 மணிக்கு, திருச்சி, தேரடிக்கடைத் தெரு, பழக்கடை சத்திரத்தில், தோழர் ச. துரைசாமி—தோழியர் இராஜாம்பாள் திருமணம், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், கண்ணதாசன், அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, மதிவாணன் ஆகியோர் பேசுவர்.

* * *

28–8–55 காலை 9½ மணிக்கு, தஞ்சை, சகாநாயக்கன் தெரு, எண் 2312, சகாநாயக்கர் இல்லத்தில், தோழர் மு. ரெத்தின சபாபதி—தோழியர் புஷ்பவல்லி திருமணம், தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.